# திசு வளர்ப்பு முறையில் புதிய ரக தேக்கு

19 July,2015 | Dinamalar

கோவை :கோவையில் உள்ள வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம், திசு வளர்ப்பு முறையில் புதிய ரக தேக்கு மரக்கன்றுகளை உருவாக்கியுள்ளது.விதையால் உருவாக்கப்பட்ட கன்றுகளை கொண்டு, தேக்கு வளர்க்கப்படுவதால், மண் வளம் மற்றும் விதையின் முளைப்பு திறன் குறைவு காரணமாக, சில இடங்களில் சரியாக வளர்வதில்லை. பத்துக்கு ஐந்து கன்றுகள் மட்டுமே வளரும். சில நிலங்களில் அதுவும் வளர்வதில்லை.

இதனால், விவசாயிகள் மத்தியில் தேக்கு பயிரிடுவதில் தயக்கம் இருந்து வருகிறது.இப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில், கோவையில் உள்ள வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம், திசு வளர்ப்பு முறையில் தேக்கு கன்றுகளை உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டது.

இதன் பயனாக தற்போது, 100 சதவீதம் முளைப்பு திறன் கொண்ட, புதிய ரக வீரிய தேக்கு மர கன்றுகள் உருவாக்கப்பட்டுள்ளன.வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன உயிர் தொழில்நுட்பவியல் துறைத்தலைவர் யசோதா கூறியதாவது: கேரளாவில் உள்ள நிலம்பூர் மற்றும் ரான்னி வனப்பகுதில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தேக்கு மரங்களில் இருந்து, திசுக்கள் எடுக்கப்பட்டு, அதிலிருந்து புதிய ரக வீரிய தேக்கு கன்றுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது, எல்லா வகை மண்ணிலும் நன்றாக வேர் பிடித்து வளரும் தன்மை கொண்டது. நடப்பட்ட 15 ஆண்டுகளில் அறுவடை செய்யலாம். தற்போது எங்களிடம் 8000 மரக்கன்றுகள் உள்ளன. தேவைப்படும் விவசாயிகள், வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தை அனுகலாம். இவ்வாறு, யசோதா கூறினார்.மேலும், விபரங்களுக்கு, 9487841515 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளவும்.